[2020 ஜனவரி 9

22—

நெற்களம்

***46305—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதியில் இருக்கின்ற நெற்குன்றம் ஊராட்சியில், ஏறக்குறைய 1,000 ஏக்கர் அளவிற்கு நெற்பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் அறுவடை செய்யும்போது களம் இல்லாத காரணத்தினால் அந்தத் தாள்களையெல்லாம் ரோட்டிலே போட்டு போக்குவரத்து பாதிக்கப்படுகின்ற அளவிலே அறுவடை நடைபெறுகிறது. ஆகவே, செக்கஞ்சேரி பகுதியில் சர்வே நம்பர் 43–லிருக்கின்ற சுமார் 30 சென்ட் நிலத்திலே இந்த அரசாங்கம் நெற்களம் அமைத்துத் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு இந்த நெல்லை, கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு சென்று விற்பதற்கான வசதியில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவசாயம் தொடர்பில்லாத வேறு துறையாக இருந்தாலும், நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்துத்*

2020 ஜனவரி 9]

தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 27 உலர் களங்கள் கட்டப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. இருப்பினும், மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி மூலமாக போதுமான நிலம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், விற்பனைக் குழு நிதியின்மூலம் நெற்களம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில், குறிப்பாக மாதவரம் தொகுதியிலே, விவசாயப் பொறியியல் துறையின் மூலமாக மானியத்திலே வழங்கப்படுகின்ற டிராக்டர்கள் வாங்க இன்னும் அதிகமான விவசாயிகள், காத்திருப்போர் பட்டியலிலே இருக்கின்றார்கள். கடந்த ஆறு மாத காலமாக அவர்களுக்கு டிராக்டர் மற்றும் விவசாயப் பொருட்களெல்லாம் வழங்கப்படவில்லை. அதேபோன்று, சென்ற வருடம் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் கொடுக்கும்போது, அந்த மானியத்தை கழித்துக் கொண்டு விவசாயிகள் பணம் கட்டுவதற்கான ஏற்பாடு ஆகியிருந்தது.ஆனால்,இப்போதுஒவ்வொருடிராக்டருக்கும்7–லிருந்து 8 இலட்சம் ரூபாய் வரை விவசாயிகள் முதலில் கட்டி, மானியத்தை பிறகு பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற நிலைமை இருக்கின்றது. 7, 8 இலட்சம் ரூபாய் புரட்டுகின்ற அளவிற்கு அங்கிருக்கின்ற விவசாயிகள் வசதி படைத்தவர்களாக இல்லை. ஆகவே, அதைக் குறைத்துத் தர வேண்டும். மானியத்தை விலையிலே* adjust *செய்து, மானியம் போக மீதி விலையை உடனடியாகக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதேநேரத்தில், அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு போதுமான விவசாயப்*

பொருட்கள் மானியத்தில் வழங்கப்படவில்லை. சாதாரண சிறு டிராக்டர்கள்8–லிருந்து 20 வரை உள்ள டிராக்டர்கள், பூச்சி மருந்து அடிக்கின்ற ஸ்பிரேயர்கள், களை எடுக்கின்ற மெஷின்களெல்லாம் மானியத்திலே வழங்கப்படவில்லை. அதேநேரத்திலே விவசாயிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் கேள்வி கேளுங்கள். நீங்கள் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். சுதர்சனம்: மன்னிக்க வேண்டும். ஆகவே, இவற்றையெல்லாம் தயவுசெய்து செய்து கொடுத்து, திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு அதிகமாக fund ஒதுக்கி, மானியத்தில் அதிகமான பொருட்களை, விவசாயத் துறை வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் வேளாண்மைத் துறைக்கென்று அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, விவசாயிகளுக்கு வேண்டிய அத்தனை உபகரணங்களையும் மானியத்தில் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். முறைகேடு நடைபெறாமல் இருப்பதற்காக, இன்று விவசாயிகள் online மூலம் பதிவு செய்து, அவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு, அவர்களுக்குரிய மானியம், பின்னேற்பு மானியமாக, அவர்கள் கொள்முதல் செய்த அந்த உபகரணங்களுக்கு பின்னாளில் உடனடியாக மானியங்களை அந்தந்தத் துறை அதிகாரிகள் வழங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு தேவைப்படுகின்ற பூச்சி மருந்தாகட்டும், விதையாகட்டும் எதுவாக இருந்தாலும் அத்தனையையும் உடனுக்குடன் தேவையறிந்து விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

2020 ஜனவரி 9]

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியத்தில், தரங்கம்பட்டி ஊராட்சி பகுதியில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்* Marketing committee*-யின்* DPC *மூலமாக நெல் கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றோம். நேரடி நெல் கொள்முதல் நிலையம்*-DPC *என்பது உணவுத் துறையின் மூலமாகச் செயல்படுகிறது. ஆகவே, முறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் நானும் தெரிவித்து, நீங்களும் தெரிவித்து, அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை

***53923—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமப் பகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டும் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–50

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை